டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

அக்ரி-டாக்டர்
மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

agridoctor.in | 13.7.2024 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 023 - Madurai | Online Edition

# மீனவர்களுடனான கோடைகால சந்திப்பு 2024 மதுரையில் கோலாகலமாக நடைபெற்றது



புது தில்லி, ஜூலை 12

மத்திய மீன்வளத்துறை சார்பில் நேற்று மதுரையில் 'மீனவர்களுடனான கோடை கால சந்திப்பு நிகழ்ச்சி 2024' நடைபெற்றது. பல்வேறு திட்டங்களின் சாதனைகளை முன்னிலைப்படுத்தவும், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் உத்திசார் விவாதங்களை நடத்தவும், மீன்வளத் துறையின் முன்னேற்றம் மற்றும் முன்னோக்கிச் செல்வதற்கான வழிகள் குறித்து விவாதிக்கவும் இந்நிகழ்ச்சி ஒரு தளமாக அமைந்தது.

மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் ராஜவ் ரஞ்சன், இணையமைச்சர்கள் எஸ்.பி. சிங் பாகேல், ஜார்ஜ் குரியன் ஆகியோர் இதில் கலந்து கொண டனர். பல்வேறு நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொழில் நுட்பங்களை வெளிப்படுத்தும் கண்காட்சியும் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உத்தரப்பிரதேச மாநிலத்தின் மீன்வளத்துறை அமைச்சர் டாக்டர் சஞ்சய் குமார் நிஷாத், பீகார் மாநில கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் ரேணுதேவி, அசாம் மாநில மீன்வளத்துறை அமைச்சர் கோப் மஹந்தா, மேகாலயாவின் கால்நடை பராமரிப்பு, கால்நடை மருத்துவம் மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் அலெக்சாண்டர் லாலு ஹெக், அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் கேப்ரியல் டி.வாங்சு மற்றும் ஒடிசா அமைச்சர் (பொறுப்பு) கோகுலானந்தா மல்லிக் ஆகியோரும் பங்கேற்றனர்.

இந்திய மீன்வளத் துறையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றங்களை விளக்கும் காணொலி ஒன்று காட்சிப்படுத்தப்பட்டது. 19 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கிய ரூ.114 கோடி செலவில் பிரதமரின் மத்ஸ்ய சம்பதா திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட 321 பயனுள்ள திட்டங்கள் மெய்நிகர் முறையில் தொடங்கப்பட்டன. துவக்க இடங்களில் இருந்து ஏராளமான மீனவ மக்கள் காணொலி வாயிலாகக் கலந்துரையாடினார்கள். மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர், கிசான் கடன் அட்டைகளை விநியோகித்ததுடன், மத்ஸ்ய சம்பதா திட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட பயனாளிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கி டிஜிட்டல் வர்த்தகத்திற்கான திறந்த வெளி கட்டமைப்பில் (ஓ.என்.டி.சி) இணைந்துள்ள மீன் விவசாயிகள் உற்பத்தியாளர்கள் அமைப்புகளுக்கு (எஃப்.எஃப்.பி.ஓ) பாராட்டு தெரிவித்தார்.

சந்தை இணைப்புகளை நிறுவுவதற்கும், மீன்வள வணிகங்களை விரிவுபடுத்துவதற்கும், போட்டி சந்தையை எளிதாக்குவதற்கும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, அனைத்து எஃப்.எஃப்.பி.ஓக்கள் மற்றும் மீன்வள கூட்டுறவு நிறுவனங்களை தங்கள் வலையமைப்பில் இணைக்க ஓ.என்.டி.சி உடன் இந்திய அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறையின் முன் முயற்சியான இந்திய அரசின் ஆதரவுடன் இயங்கும் ஓ.என்.டி.சி, இயங்குதளத்தை மையமாகக் கொண்ட மாதிரியிலிருந்து திறந்தவெளி வலையமைப்பிற்கு மாற்றுவதன் மூலம் மின்னணு வர்த்தகத்தை ஜனநாயகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது. இது இந்தியாவில் உள்ளடங்கிய திறந்தவெளி டிஜிட்டல் வர்த்தக சூழலியலை உருவாக்குவதற்கான முன்னோடி முயற்சி–யாகும்.

மத்ஸ்ய சம்பதா திட்டத்தின் கீழ் 2195 எஃப்.எஃப்.பி.ஓக்களை நிறுவ மீன்வளத்துறை ஆதரவளித்துள்ளது. 95 எஃப்.எஃப்.பி. ஓக்கள், ஓ.என்.டி.சி தளத்தில் சேர்ந்துள்ளன. ஓ.என்.டி.சி வலையமைப்பில் சேர்ந்துள்ள உத்தரப்பிரதேசத்தின் கோரக்பூர் மாவட்டத்தில் உள்ள கோரக்பூர் கிசான் உற்பத்தி நிறுவனம், சத்தீஸ்கரின் கங்கர் மாவட்டத்தில் உள்ள கப்சி ஃபிரி ஃபார்மர் உற்பத்தி நிறுவனம், பிகாரின் பூர்னியாவில் உள்ள பன்மாங்கி

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

மீன் வேளாண் உற்பத்தி நிறுவனம், சத்தீஸ்கரின் பஸ்தார் மாவட்டத்தில் உள்ள பஸ்தார் பேர்ல் மீன் வேளாண் உற்பத்தி நிறுவனம், உத்தரப்பிரதேசத்தின் தியோரியா மாவட்டத்தில் உள்ள லாரி மீன் உற்பத்தி நிறுவனம் மற்றும் தெலங்கானாவின் சித்திபெட்டில் உள்ள கொண்டபாகா மீன்வள உற்பத்தி நிறுவனம் ஆகிய ஆறு நிறுவனங்களின் சிறப்பான பங்களிப்பிற்காக அவை பாராட்டுதல்களைப் பெற்றன. இந்த ஒத்துழைப்பு, எஃப்.எஃப்.பி. ஓக்களுக்கு குறைக்கப்பட்ட பரிவர்த்தனை செலவுகள், அதிகரித்த சந்தை அணுகல், மேம்பட்ட வெளிப் படைத் தன்மை, அதிகரித்த போட்டி மற்றும் போட்டித்தன்மை, புதுமை மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் போன்ற பல நன்மைகளை வழங்கியுள்ளது.

மதுரையில் நடைபெற்ற விழாவின் போது, நிலையான நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளைக் கடைபிடித்தல், பணியிடங் களில் புதுமைகளை புகுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வண்ண மீன்வளர்ப்பில் குறிப்பிடத்தக்க பங்காற்றியதற்காக வண்ண மீன்வளர்ப்பு அலகுகளைச் சார்ந்த ஐந்து பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி

சேலம், ஜூலை 12

சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரம், தலைச்சோலை பஞ்சாயத்தில் வேளாண்மை துறை ஆத்மா திட்டத்தின் கீழ் உள் மாவட்ட அளவிலான பயிற்சி மண்புழு உரம் தயாரித்தல் என்னும் தலைப்பின் கீழ் நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு ஆத்மா சேர்மன் தங்கசாமி தலைமை வகித்தார். மேலும் மண்புழு உரம் எவ்வாறு தயாரிப்பது அது எந்தெந்த பயிர்களுக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை பற்றி தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் முனைவர் செந்தில்குமார், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும் இப்பயிற்சியின் போது தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் பேராசிரியர் மாலதி, கலந்து கொண்டு விவசாயி களுக்கு புதிய தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தார். மேலும் இப்பயிற்சியில் தோட்டக்கலை உதவி அலுவலர் ஜெயப்பிரகாஷ் கலந்து கொண்டார். இப்பயிற்சிக்கான முழு ஏற்பாடுகளையும் ஏற்காடு வட்டார ஆத்மா அலுவலர்கள் துரையரசு அருண்குமார் மேற் கொண்டிருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பயறு வகை பயிர்களில் உயரிய தொழில்நுட்பங்கள்

சேலம், ஜூலை 12

அட்மா திட்டத்தின் கீழ் பயறு வகை பயிர்களில் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்துதல் விதை நேர்த்தி மற்றும் உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம் சேனைப்பாளையம் கிராமத்தில் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் இரா.கிரிஜா தலைமை தாங்கி பயறு வகை உற்பத்தி செய்வதன் நோக்கம், உணவு மற்றும் உணவு பாதுகாப்பு இயக்கத்தில் உளுந்து, துவரை சாகுபடி சான்று விதைகள் விநியோகம், தொகுப்பு செயல்விளக்கம் கலைஞரின் திட்டத்தில் மருந்து தெளிப்பான் விநியோகம் மற்றும் துவரை பரப்பு விநியோகம் குறித்து எடுத்து கூறினார்.

தோட்டக்கலை அலுவலர் ஸ்ரீவிலாசினி தோட்டக்கலை துறை மானிய திட்டங்கள் குறித்தும் துணை வேளாண்மை அலுவலர் பி.கிருஷ்ணமூர்த்தி பயிர் காப்பீடு திட்டம் பற்றியும், கிசான் கடன் அட்டை பற்றியும் எடுத்து கூறினர். விதைச்சான்று அலுவலர் டி.சரவணன் பயிற்சியாளராக கலந்து கொண்டு பயறு வகை கருவிதையில் இருந்து ஆதாரம் விதைகள் மற்றும் சான்று விதைகள் உற்பத்தி தொழில்நுட்பங்கள், விதைப்பண்ணை அமைத்தல், வயல் ஆய்வு, கலவன் நீக்குதல், விதைகள் கொள்முதல், விதை மாதிரி எடுத்தல், சான்றட்டை பொருத்துதல், சான்று பெற்ற விதைகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குதல் குறித்து பயிற்சி வழங்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றார். உயிரியல் கட்டுபாட்டு காரணி சூடோமோனாஸ் கொண்டு துவரை விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. உதவி வேளாண்மை அலுவலர் தா.பிரின்சி, உதவி தோட்டக் கலை அலுவலர் பி.தேசிங்குராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் கலந்து கொண்ட 40 க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. இப்பயிற்சி ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி செய்து இருந்தனர்.

# வேளாண் விளைபொருட்களில் மதிப்புக்கூட்டல் குறித்த விவசாயிகள் பயிற்சி



விருதுநகர், ஜுலை 12

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டாரத்தில் அனுப்பன்குளம் கிராமத்தில் விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல் குறித்த தொழில்நுட்பபயிற்சி நடைபெற்றது.

இது குறித்து சிவகாசி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.சுந்தரவள்ளி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சிவகாசி வட்டாரத்தில் 2024-25ம் நிதியாண்டில் அனுப்பன்குளம் கிராமத்தில் விரிவாக்க சீரமைப்புத்திட்டத்தின் கீழ், வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல் குறித்த தொழில்நுட்ப பயிற்சியானது நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு சிவகாசி, வேளாண்மை உதவி இயக்குநர் ப.சுந்தரவள்ளி தலைமையேற்று வேளாண்மைத்துறை மூலம் மானிய விலையில் வழங்கப்படும் இடுபொருட்களான நுண்ணூட்ட உரங்கள், உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் பற்றியும், அவற்றினை பயன்படுத்தும் முறைகள் மற்றும் அவற்றின் நன்மைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

விருதுநகர் மாவட்ட தொழில் மைய தொழில்நுட்ப அலுவலர் மாரீஸ்வரி கலந்து கொண்டு தானியங்கள், பயறுவகைகள் மற்றும் இதர விளைபொருட்களில் மதிப்புக்கூட்டல் தொழில்நுட்பம் பற்றியும், மதிப்புக்கூட்டி விற்பனை செய்யும் தொழில் முனைவோருக்கு அரசு வழங்கும் நிதியுதவி, வங்கி மூலம் கடன் பெறும் வசதிகள் மற்றும் அதனை பெற வழிமுறைகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

சிவகாசி, வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் வெங்கடாசலம், வேளாண் விற்பனைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி விவசாயி களுக்கு எடுத்துரைத்தார். பயிற்சியின் இறுதியில் வட்டார தொழில் நுட்ப மேலாளர் கணேஷ்குமார் நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் கதிரவன், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அருண்குமார் மற்றும் சந்தனலட்சுமி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் பழங்குடியின மக்களுக்கு இயற்கை வேளாண்மை பயிற்சி



திருநெல்வேலி, ஜூலை 12 பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் நான்கு நாள் இயற்கை வேளாண்மை பயிற்சி கடந்த 8/7/24 முதல் 11/7/24 அன்று வரை பழங்குடியின மக்களுக்கு நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் முனைவர் அ.ஜெயா ஜாஸ்மின் தலைமை தாங்கினார். கிள்ளிக்குளம் வ உ சி வேளாண் கல்லூரி முதல்வர் துவக்க உரையாற்றினார். கிராம மேம்பாடு நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட இப்பயிற்சியில் விவசாயிகளுக்கு வானிலை தகவல்களை பெற்று அதன் அடிப்படையில் வேளாண் பணிகளை மேற்கொள்வது, ரப்பர் தோட்டங்களில் ஊடு பயிர்களை சாகுபடி செய்வது, மகளிர் மற்றும் விவசாயிகளுக்கு விஞ்ஞான ரீதியாக ரப்பர் பால் எடுக்கும் பயிற்சி, வங்கிகளில் வேளாண் கடன்களை பெறும் நடைமுறைகள், மத்திய மற்றும் மாநில அரசுகளின் வேளாண் நலத்திட்டங்கள் பற்றிய செயல்முறைகள் மற்றும் விளக்கங்கள் வழுங்கபட்டது. இந்த பயிற்சியில் திரு வட்டார வேளாண் உதவி இயக்குனர் S.சந்திரபோஸ், தோட்டக்கலை உதவி இயக்குனர் எஸ்.என்.திலீப், மூண்டலீஸ் இந்திய புட்ஸ் நிறுவனத்தின் மா.இராஜேஸ்வரன், பெடரல் வங்கியின் செ.விக்னேஷ், மேலாளர் (வேளாண் கடன்), திருநெல்வேலி மண்டலம் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பயிசியில் முழுக் கோடு, கற்று வா, தலக்கு மலை, பேணு, பத்து காணி, கல்லற வயல், சிறு கடத்து காணி, மேலே மண்ணடி, ஆறு காணி, அணை முகிய ஆகிய கிராமங்களிலுள்ள 400க்கு மேற்பட்ட பழங்குடியினர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இறுதி நாள் விழாவில் திருப்பதிசாரம் வேளாண் அறிவியல் மையத்தின் தலைவர் முனைவர் S.சுரேஷ், கிராமப்புற மேம்பாடு நிறுவன செயலர் A.மரிய ஜேம்ஸ் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். இப்பயிற்சியின் ஒருங்கிணைப்பாளராக பேச்சிப்பறை தோட்டக்கலை ஆராய்ச்சி மைய இணைய பேராசிரியர் முனைவர் தி.ராஜ் பிரவின் மற்றும் கிராம மேம்பாடு நிறுவனத்தின் னி.கலைவாணி மற்றும் S.கிறிஸ்டோபர் ஆகியோர் செயல்பட்டனர்.

# விவசாயிகளை தேடி இப்கோ கிசான் ட்ரோன்

இப்கோ நானோ யூரியா (20% தழைச்சத்து), நானோ டி.ஏ.பி. (8% தழைச்சத்து மற்றும் 16% மணிச்சத்து) மற்றும் சாகரிகா திரவ உரங்கள் பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்தி மகசூலை அதிகரிக்கும். மேலும் திரவ உரங்களை குருணை உரங்களுக்கு மாற்றாக இலைவழியாக தெளிப்பதன் மூலம் விவசாயிகளின் இடுபொருள் செலவு குறைந்து வருமானம் அதிகரிக்கும். நானோ உரங்களை பிற வேளாண் பூச்சிக்கொல்லிகளுடன் கலந்தும் தெளிக்கலாம்.

**ட்ரோன் தெளிப்பான் மூலம் நானோ உரங்களை பயன்படுத்தும் முறை**

10-12 லிட்டர் டேங்கிற்கு 250-500 மி.லி. நானோ திரவ உரங்களுடன், சாகரிகா, முற்றிலும் நீரில் கரையக்கூடிய உரங்கள், வேளாண் பூச்சிகொல்லி மருந்துகளும் கலந்து பயன் படுத்தலாம். (ஒரு ஏக்கருக்கு 1 டேங்க் போதுமானது). விவசாயிகள் குறைந்த செலவில் ட்ரோன் சேவையை பெற இப்கோ கிசான் உதய் செயலில் முன்பதிவு செய்யலாம்.

- ADVT.



# சூலூரில் சோளம் முதிர்ச்சி பருவ ஆய்வுப்பணி



கோயம்புத்தூர், ஜூலை 12

கோவை மாவட்டம், சூலூர் வட்டாரத்தில் சித்திரை, பட்டத்தில் விதைத்த சோளம் விதைப்பண்ணைகளில் தற்போது முதிர்ச்சி பருவம் மற்றும் அறுவடை பருவம் காணப்படுகின்றது. சூலூர் அப்பநாயக்கன்பட்டியில் சோளம் விதைப்பண்ணையில் நேற்று ஆய்வு செய்த கோவை விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்றுத் துறை உதவி இயக்குநர், பி.ஆ.மாரிமுத்து கூறியதாவது, தற்சமயம் சித்திரை பட்டத்தில் அமைத்த சோளம் விதைப்பண்ணைகள் முதிர்ச்சி பருவம் அடைந்துள்ளது. விதைத்தரத்தினை நிர்ணயிக்கும் கலவன் கணக்கீடு, விதை வழி பரவும் நோய்களான கரிப் பூட்டை, சோரி கெர்னல் ஸ்மட் போன்ற வற்றின் கணக்கீடு இப்பருவத்தில் மேற்கொள்ளப்படும். இதனால் அடுத்த பயிர் தலைமுறையில் நோய் தாக்குதல் இன்றி இனத்தூய்மை பாதுகாக்கப்பட்டு சிறந்த தரத்திலான விதைகள் விவசாயிகளுக்கு வழங்க முடியும்.

மேலும் அறுவடையான பின் விதைக் குவியல்களில் பரிந்துரைக்கப்பட்ட நீர்தயப்பு (12சூ) அளவுக்குள் இருப்பதையும் உறுதி செய்யப்படுகிறது. இதனால் நீண்ட நாள் விதை இருப்பு வைக்க முடியும். இறுதியாக 'தமிழ்நாடு சான்று பெற்ற விதைகள்' என்று அச்சடிக்கப்பட்ட புதிய சாக்குப் பைகளில் நிரப்பி ஈய வில்லைகளிட்டு சீல் செய்யப்படுகிறது. பின்னர் விதை சுத்தி நிலையங்களில் விதை தரங்களின்படி சுத்தம் செய்து மாதிரி எடுக்கப்பட்டு, பகுப்பாய்வு முடிவுகளின் அடிப்படையில் சான்றட்டை பொருத்தி இறுதியாக விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய அந்தந்த வேளாண் விரிவாக்க மையங்களுக்கு அனுப்பப்படுகிறது.

எதிர்வரும், ரபி பருவத்திற்கு தேவையான சோளம், உளுந்து, பாசிப்பயறு மற்றும் நிலக்கடலை விதைகள் உற்பத்தி பணி தற்சமயம் நடந்து வருகிறது என்ற தகவலையும் தெரிவித்தார். மேலும் இந்த ஆய்வின் போது விதைச்சான்று அலுவலர் த.ஹேமலதா மற்றும் உதவி விதை அலுவலர் பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

# 4:2:1 உரப்பயன்பாட்டு விகிதம் என்றால் என்ன?

மண் வளத்திற்கான பரிந்துரைக்கப்பட்ட உகந்த தழை, மணி மற்றும் சாம்பல் சத்து உரப்பயன்பாட்டு விகிதம் 4:2:1 விகிதம். இந்த விகிதத்தில் உர உபயோகம் இருப்பின் மண்ணில் உள்ள மற்ற சத்துகள் கிடைப்பதும் சீராக இருக்கும்.

பயிர் தேவைகளுக்கு ஏற்ப தழை, மணி மற்றும் சாம்பல் சத்துகளையும் பயன்படுத்தப்படுவது இன்றியமையாதது.

மண் பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் நிலத்தில் உரப்பயன்பாடு பரிந்துரைக்கப்படுகிறது.

மண் பரிசோதனை சார்ந்த உரப் பயன்பாடு உரங்களை சமச் சீரான முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்கிறது.




சமச்சீர் உர உபயோகத்தின் இலக்கு பயிர் விளைச்சலை அதிகரிக்க உறுதியான முயற்சி எடுப்பது, இலாபம் மேம்படுதல், பயிர்களின் தரத்தை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மண், நிலத்தடி நீர், மாசுபாட்டைத் தவிர்த்தல் அல்லது கட்டுப்படுத்துதல் ஆகியவை ஆகும்.

இவ்வாறு சமநிலை உரம் உபயோகத்தின் மூலம் சீர்குலைந்த மண் வளத்தை சீராக்க வேண்டும் என சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ஹனீஷா தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# ஆலங்குடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மின்னணு தேசிய வேளாண் சந்தை திட்டம் (e-NAM) பயிற்சி

புதுக்கோட்டை, ஜூலை 12

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் வட்டாரம் வேளாண்மை உழவர் நலத்துறை கீழ் செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி ஆலங்குடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மின்னணு தேசிய வேளாண் சந்தை திட்டம் (e-NAM) பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்ச்சிக்கு திருவரங்குளம் வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குநர் க.வெற்றிவேல் முன்னிலை வகித்தார்.

அட்மா தொழில்நுட்ப மேலாளர் இரா.மகேந்திரன், விவசாயி களை வரவேற்று பேசி வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் விவசாயிகள் தங்கள் விளை பொட்களை நியாயமான விலையில் சந்தைபடுத்தியும் உரிய ஆதாய விளையினை பெற ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும் விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் பயன் பெறலாம் என்று கூறினார். இந்நிகழ்ச்சியில் ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் பா.பிரதீபா, பேசும் போது விவசாயிகள் தங்களது விளைபொருட்களை எவ்வித இடைத்தரகரும் இன்றி மறைமுக ஏலம் மூலம் அதிக விலைக்கு மின்னணு பரிவர்த்தனை மூலம் அதிக லாபம் பெற முடியும் என்றும் மேலும் வெளி மாநிலங்களில் வியாபாரிகள் கொள்முதல் செய்வதால் அதிக லாபம் பெற வாய்ப்பு உள்ளது என்றும் மத்திய அரசால் தொடங்கப்பட்ட மின்னணு தேசிய வேளாண் திட்டமானது (e-NAM) ஒழுங்குமுறை விற்பனை மூலம் விவசாயிகளுக்கு செயல்படுகிறது என்று கூறினார்.

இத்திட்டத்தின் மூலம் பயன் பெறும் விவசாயிகள் தங்களது பெயர் மற்றும் விபரம், ஆதார் எண், வங்கி கணக்கு எண் மற்றும் புகைப்படத்துடன் தங்களது அருகாமையுள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பதிவு மேற்கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார். இப்பயிற்ச்சியில் 40 விவசாயிகள் பங்கேற்று சிறப்பித்தனர். பயிற்சி ஏற்பாடுகளை லோ.கவியரசி, வி.முருகன் ஏற்பாடு செய்தனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மக்களுடன் முதல்வர் திட்டம் பற்றிய தகவல்கள் தெரியுமா?

மக்களுக்கு அன்றாடமும் அரசு துறைகளின் சேவைகள் தேவைப்படுகின்றன. அவர்கள் அரசுத்துறை அலுவலர்களை அணுகும்போது, அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை மேலும் எளிதாக, விரைவாக, செம்மை படுத்தி சென்று சேர உதவும் வகையில் தான் இந்த 'மக்களுடன் முதல்வர் ' என்னும் திட்டம் அதுவும் கிராமப்புற பகுதி மக்களுக்காக 11.7.24 அன்று தர்மபுரி மாவட்டத்திலுள்ள பாளையம் புதூரில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

**இந்த திட்டம் இதற்கு முன் செயல்படுத்தபட்டதா?**

இந்த திட்டம் முதலில் 'நகர்ப்புற உள்ளாட்சிகளில் கடந்த டிசம்பர் 23ல் கோவையில் தொடங்கப்பட்டு, வெற்றிகரமாக தமிழகம் முழுவதுமுள்ள நகர்ப்புற உள்ளாட்சி பகுதியில் 2058 முகாம்கள் நடத்தி, 8 லட்சத்து 74 ஆயிரம் மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறபட்டு ர்வு காணப்பட்டது.

**தற்போது கிராமப்புற பகுதிகளுக்கு விரிவுபடுத்தபட்டுள்ளதா?**

ஆம். நகர்ப்புற பகுதியில் வெற்றிகரமாக செயல்படுத்தபட்ட இத்திட்டம் தமிழகம் முழுவதுமுள்ள 15,525 கிராம ஊராட்சிகளில், மக்கள் பயன்பெறும் வகையில் 2500 முகாம் (CAMP) நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளபட இருக்கிறது.

**இந்த திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் என்ன?**

இத்திட்டத்தின் கீழ் கிராமப்புற மக்கள் அதிகமாக நாடும் 15 துறைகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் வாயிலாக 44 முக்கிய சேவைகள், நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள கோரிக்கைகளுக்கும் முழுமையான தீர்வு கிடைக்க வழிவகை காண இத்திட்டம் உதவுகிறது.

**அந்த 15 அரசுத்துறைகள் எவை? எவை? அவற்றின் முக்கிய செயல்பாடுகள்?**

**1) வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை**

நுண் நீர்பாசனம், கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், உழவர்களுக்கான நீர்ப்பாசன வசதி உருவாக்கம் தமிழ்நாடு சிறுதானிய திட்டம், வீட்டுத்தோட்டத்தை ஊக்குவித்தல், இ.வாடகை

**2) கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத்துறை**

கால்நடை பாரமரிப்பு, கோழி வளர்ப்பு, மீன்வளத்துறை திட்டம்

**3) கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர்துறை**

கடன்கள், கூட்டுறவு சங்கம் பொது வழங்கல் முறை, பெயர் திருத்தம் / முகவரி மாற்றம்

**4) வருவாய்த்துறை**

பட்டா மற்றும் சிட்டா, பட்டா மாற்றம், நில அளவை, வாரிசு, சாதி சான்றிதழ் உதவித்தொகை தொடர்பானவை, தாமதமாக பிறப்பு, இறப்பு பதிவுகள்.

**5) ஊரக வளர்ச்சி துறை**

வீட்டுவரி, குடிநீர் குழாய் இணைப்பு, கட்டிட வரைபட திட்டம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் திடக்கழிவு மேலாண்மை, வர்த்தக உரிமை.

**6) மின்சார துறை**

புதிய இணைப்பு, டாரிப் மாற்றம், பெயர் மாற்றம் கூடுதல் மின்சார கட்டணம் தொடர்பானவை.

**7) சமூக நலத்துறை**

பெற்றோர் இருவர் மற்றும் ஒருவரை இழந்தவர்களுக்கான நிதி ஆதரவு திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்.

**8) சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை**

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம்.

**9) ஆதி திராவிட மற்றும் பழங்குடியின துறை**

கல்வி உதவி தொகை (மாணவ/மாணவிகள்) வீட்டு மனை பட்டா, தாட்கோ கடன்கள்

**10) பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

டாம்கோ, டாப் செட்கோ, கல்வி உதவி தொகை (மாணவ, மாணவிகள்).

**11) சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை**

புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனமேம்பாட்டு திட்டம், பிரதம மந்திரி வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உறுதி திட்டம், அனைத்து கடன்கள் திட்டம், உணவு பதப்படுத்துதல் சிறு / குறு நிறுவனங்கள், மாவட்ட தொழில் மையம் – கடனுதவி.

**12) தொழிலாளர் நல வாரியம்**

நல வாரியத்தால் வழங்கபடும் பல்வேறு சேவைகள்.

**13) போக்குவரத்து**

கட்டணமில்லாத விடியல் பேருந்து வசதி இலவச பஸ் பாஸ்

**14) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை**

நிலத்தின் வகைபாட்டை மாற்றுதல் நகர சீரமைப்பு துறை, குடியிறுப்புகள் நகர்ப்புற மேம்பாடு மற்றும் தமிழக வீட்டு வசதி வாரியம்.

**15) உள்துறை**

பொருளாதார குற்றங்கள், நில அபகரிப்பு, ஏமாற்றுதல் தொடர்பான புகார்கள், போக்சோ மற்றும் பிற புகார்கள்.

இதுபோன்ற 15 துறைகளின் மூலமாக மக்களின் அன்றாட நீண்ட பிரச்சனைகளை ஒரே நாளில் தீர்வு காண மக்களுடன் முதல்வர் திட்டம் உதவுகிறது உங்கள் ஊரில்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## சணப்பில் சாம்பல் நோய் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை

**அறிகுறிகள்** : பூஞ்சாணம் இலை, இலைக்காம்பு, தண்டு, பூங் கொத்து, பிஞ்சு, காய் முதலிய அனைத்துப் பகுதிகளையும் தாக்குகிறது. நோயுற்ற பகுதிகளில் வெண்மைநிறத் துகள்கள் இலை களின் மேற்பரப்பிலும், சில சமயம் இலைகளின் கீழ்பரப்பிலும் காணப்படும். நாளடைவில் இவை ஒன்றோடொன்று இணைந்து பழுப்பாகி பின்பு கருமை நிறமாக மாறி இலைப்பரப்பு முழுவதும் மூடிவிடும். பாதிக்கப் பட்ட செடி வளர்ச்சிக் குன்றி வாடி வதங்கிவிடும். இந்நோய் பிஞ்சுகள் விட்டபின் தோன்றினால், பிஞ்சுகள் முற்றுவதில்லை. முதிர்ச்சியுறும் பருவத்தில் தென்பட்டால், காய்கள் சிறியனவாகவும், சுருங்கியும் காணப் படும். நாளடைவில் பாதிக்கப்பட்ட பிஞ்சு, காய்கள் கருமை நிறமாகி கீழே விழுந்துவிடும். நோயுற்ற இலைகள் மூல மாகவும், காற்றின் மூலமாகவும் இந்நோய் பரவுகிறது.

**மேலாண்மை :** வேப்பங்கொட்டைச்சாறு 5 சதம் அல்லது வேப் பெண்ணை 3 சதம் இரண்டு முறை 10 நாட்கள் இடைவெளியில் நோய் கண்டவுடன் தெளிக்க வேண்டும். யூகலிப்டஸ் இலைச்சாறு 10 சதம் நோய் கண்டவுடன் மற்றும் 10 நாட்கள் கழித்தும் தெளிக்கவும். எக்டர் ஒன்றுக்கு கார்பன்டாசிம் 250 கிராம் அல்லது நனையும் கந்தகத்தூள் 2.5 கிலோ தேவையான தண்ணீரில் கரைத்துத் தெளிக்கவும் என சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ..விமலா தெரிவித்தார்.


IFFCO
Wholly owned by Cooperatives
இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம்
IFFCO
Wholly owned by Cooperatives
பயிர்களில் ஊட்டச்சத்தின் அளவை அதிகரிக்கிறது
சுற்றுச்சூழலுக்கு உகந்தது
குருணை உரங்களை விட விலை குறைவு
உரச்செலவை குறைக்கிறது
பயிரின் தரம் மற்றும் மகசூலை அதிகரிக்கிறது
விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கிறது
IFFCO
पूर्णतः सहकारी स्वामित्व
Wholly owned by Cooperatives
NANO
DAP
Nano Di Ammonium Phosphate
LIQUID (8:16:0)
CROP NUTRITION REDEFINED
Seed Primer | Growth Enhancer | Yield Booster
Less Cost, More Profits
Suitable for all Crops
NANO FERTILISER
FCO Approved
500 ml
விலை ரூ.600/-

# விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைகள் தரம் குறித்து விவசாயிகளே ஆய்வு செய்யலாம்

திருவாரூர், ஜூலை 12

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த விதைகளின் தரம் குறித்து விதை பரிசோதனை மையத்தில் ஆய்வு செய்து பயன் பெற வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

விதைப்பு மேற்கொள்வதற்கு முன்பு விதைத்தரம் அறிந்து விதைப்பு செய்யவேண்டியது மிகவும் முக்கியமானதாகும். தற்போது சாகுபடி பருவம் தொடங்க இருப்பதால் விவசாயிகள் தரமான விதைகளை உபயோகிக்க வேண்டும். காய்கறி பயிர் களின் விதை தேவையில் 13 முதல் 15 சதவீத சான்று பெற்ற விதைகளே நமக்கு கிடைக்கிறது. மேலும் விவசாயிகள் தனியார் நிறுவனங்களின் வீரிய விதைகளையே நம்பி இருக்கிறார்கள். மேலும் இந்த வீரிய ஒட்டு இரகங்களின் விலை மிகவும் அதிகம். அதிக விலை கொடுத்து விதைகளை வாங்கி பயிர் செய்யும் போது அதற்கேற்ற மகசூல் பெற்றால் தான் விவசாயிகள் இலாபம் பெற முடியும். மேலும் காய்கறி பயிர்களில், சான்று பெற்ற விதைகள் விதைக்கப்படுவது இல்லை. பெரும்பாலும் உண்மை நிலை விதைகளே விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் அந்த விதைகள் தரமானவையா என, உறுதியாக சொல்லமுடியாது. காய்கறி பயிர்களின் விதைகள் அதிக விலை என்பதால், அதன் முளைப்புத்திறன் மற்றும் பிற விதை காரணிகளின் குணாதிசங்களை விதைப்பரிசோதனை மூலம் அறிந்து விதைப்பது நல்லது. விதை உற்பத்தி, விநியோகம் போன்ற முக்கியமான திட்டங்களில் விதைப்பரிசோதனை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் விதைகளா என்பதைக் கண்டறிய மேற்கொள்ளப் படும் உத்திகளே விதைப்பரிசோதனையாகும். விதைப் பரிசோதனை, விதைகளின் தரத்தை விஞ்ஞானபூர்வமாத் தெரிந்துகொள்ள உதவுவதுடன், உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் தரமானதா என்று கண்டறியவும் உதவுகின்றது.

தற்போது சாகுபடி பருவம் துவங்க உள்ளதால் விவசாயிகள் தாங்களே உற்பத்தி செய்த விதைகளை விநியோகம் செய்தும் பயன்படுத்தியும் வருகின்றனர். மேலும் காய்கறி பயிர்களில் தங்கள் சொந்த விதைகளையே பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்விதம் தாங்களாகவே உற்பத்தி செய்து பயன்படுத்தி வரும் விதைகள் நாளடைவில் வீரியம் குறைந்து மகசூலும் பாதிப்படைகிறது. இதனால் அந்த விதைகள் தரத்துடன் உள்ளனவா என அறிந்து விதைத்திட விதைப்பரிசோதனை அவசியம்.

விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனை யாளர்கள் தங்களிடம் இருப்பில் உள்ள விதைகளின் தரத்தை அறிய பணிவிதை மாதிரிக்கு ரூ.80/- கட்டணத்தை நேரிலோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ மூத்த வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், 15-பி, பெரியமில் தெரு, விஜயபுரம். திருவாரூர் என்ற முகவரிக்கு அனுப்பலாம். விதை மாதிரி அனுப்பும் விவசாயி பெயர், தந்தை பெயர், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் பயிரின் வகை, ரகம், மற்றும் குவியல் எண் ஆகியவற்றுடன் விதைகளை துணிப்பையில் வைத்து அனுப்ப வேண்டும். மேலும் காய்கறி பயிர்களின் விதைகளை விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பும்போது விதை மாதிரியின் அளவு

| வ.எண். | பயிர் பணி | விதை மாதிரி அளவு (கிராம்) |
|---|---|---|
| 1. | வெண்டை | 100 |
| 2. | அவரை | 450 |
| 3. | கத்திரி | 10 |
| 4. | கொத்தவரை | 100 |
| 5. | பாகல் | 250 |
| 6. | சுரைக்காய் | 100 |
| 7. | பீர்க்கங்காய் | 150 |
| 8. | புடலை | 250 |
| 9. | பரங்கி | 10 |
| 10. | பூசணி | 100 |
| 11. | மிளகாய் | 10 |
| 12. | தக்காளி | 10 |
| 13. | முள்ளங்கி | 50 |
| 14. | முளைக்கீரை | 50 |
| 15. | பாலக்கீரை | 25 |
| 16. | வெள்ளரி | 100 |
| 17. | பட்டாணி | 250 |

என்ற அளவில் பகுப்பாய்வுக்கு அனுப்ப வேண்டும். விதை அனுப்பிய விவசாயிகள் விவரங்கள் ஸ்பெக்ஸ் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு விதைப்பரிசோதனையின்

பகுப்பாய்வு முடிவுகள் இருப்பிட முகவரிக்கு அஞ்சல் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ் அப் மூலம் தங்கள் அலைபேசிக்கே அனுப்பப்படும்.

மேற்கண்ட இந்த தகவல் திருவாரூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் கா.புவனேஸ்வரி மற்றும் வேளாண்மை அலுவலர் சே.சிவசக்தி ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.




# தலைவாசல் வட்டாரத்தில் விவசாயத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து விழிப்புணர்வு பயிற்சி

சேலம், ஜூலை 12

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டம், வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் கீழ் விவசாயத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர் பயிற்சி நாவகுறிச்சி கிராமத்தில் வேளாண்மை அலுவலர் மோனிா தலைமையில் நடைபெற்றது. மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் வேல்முருகன் ஒருங்கிணைந்த பண்ணையம் என்னவென்பது பற்றியும் இதன் மூலம் விவசாயிகள் எவ்வாறு செலவுகளை குறைத்து அதிக லாபம் பெறலாம் என்பது பற்றியும் தெளிவாக விளக்கினார். உதவி வேளாண்மை அலுவலர் பிரகாஷ் வேளாண்மை துறையில் செயல்படுத்தும் திட்டங்களை பற்றி விளக்கி கூறினார். உதவி தோட்டக்கலை அலுவலர் ராமு தோட்டக்கலை துறையில் செயல்படுத்தும் திட்டங்கள் பற்றி விளக்கிக் கூறினார். பட்டு வளர்ச்சி துறை சத்தியமூர்த்தி பட்டுப்புழு வளர்ப்பது பற்றி தெளி வாக விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். இந்த பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். உதவி தொழில் நுட்ப மேலாளர் முத்துவேல் நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை நாவக்குறிச்சி உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் ஆத்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விவசாய கடன் அட்டை (கிசான் கிரெடிட் கார்டு) ஓர் பார்வை

கிசான் கிரெடிட் கார்டு (Kisan Credit Card) என்ற விவசாயக் கடன் அட்டைத் திட்டம், மத்திய அரசு மூலம் தொடங்கப்பட்டது. சேலம் மாவட்டம், நங்கவள்ளி வட்டார விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் து.ரமேஷ் விவசாய கடன் அட்டை பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினார்.

**நோக்கம்**

- கடனில் சிக்கியுள்ள விவசாயிகளுக்குத் தேவையான நிவாரணம் வழங்கும் நோக்கத்தோடு, ரிசர்வ் வங்கி மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) ஆகியவற்றுடன் இணைந்து மத்திய அரசு எடுத்த முயற்சி இது.

- வறட்சி அல்லது பருவமழை பொய்த்த காலங்கள் மற்றும் விளைச்சல் பாதிக்கப்பட்ட காலங்களில், விவசாயிகள் அதிக வட்டி விகிதத்தில் கடன் வழங்குபவர்களிடம் கடன் வாங்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுகிறார்கள்.

- இது போன்ற சூழ்நிலைகளில் விவசாயிகளுக்கு மிகக் குறைவான வட்டி விகிதத்தில் கடன் வழங்க கிசான் கிரெடிட் கார்டு வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

**பலன்கள்**

- பொதுவாகக் கிசான் கிரெடிட் அட்டை ஐந்து ஆண்டுகளுக்கு தான் செல்லுபடியாகும். ஆனால், கட்டாயம் ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டும்.

- பயிர்களின் அறுவடை மற்றும் விற்பனைக்குப் பிறகு, கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

- கடன் காலம் 12 மாதங்கள் ஆகும். ஒருவேளை பயிர் விளைச்சல் பாதிப்பு அல்லது ஏதேனும் இடர்ப்பாடு ஏற்பட்டால், கடன் தொகையைச் செலுத்தும் காலத்தை 4 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் நீட்டித்துக்கொள்ள முடியும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

● அதிகபட்ச கடன் தொகை ரூ.3 லட்சம். விவசாயிகள் கடன் தொகையுடன் விதைகள், உரங்கள், விவசாய உபகரணங்கள் வாங்கலாம்.

● சராசரியாகச் சுமார் 9 சதவிகித வட்டியில் கடன் கிடைக்கும். நல்ல சிபில் ஸ்கோர் இருந்தால் அதிக கடன் கிடைக்க வாயப்புள்ளது. அதேபோல் நல்ல சிபில் ஸ்கோர் இருந்தால் வட்டி விகிதம் குறைவாக இருக்கும்.

● கிசான் கிரெடிட் திட்டம் மூலம் பயிர்களுக்குக் காப்பீடும் பெறலாம். குறிப்பிட்ட சில பயிர்க் கடன் வகைகளுக்குத் தேசிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு பெறலாம்.

● இந்த கிசான் கார்டு வைத்திருப்பவர்கள் இயற்கைப் பேரிடர்கள் அல்லது பூச்சித் தாக்குதல்கள் பாதிப்புகளைச் சந்தித்தால் நிவாரணம் பெற முடியும்.

● 70 வயதுக்குட்பட்ட விவசாயிகளுக்கு விபத்துக் காப்பீடு வழங்கப்படுகிறது.




## விண்ணப்பிக்கும் முறை

● இந்த கிசான் கிரெடிட் கார்டை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் எளிதாகப் பெறலாம்.

● இந்த கார்டை வழங்கும் முன்பு வங்கி, விண்ணப்பதாரரின் கிரெடிட் ஸ்கோரை கண்டிப்பாகச் சரிபார்க்கும். அதேபோல் விண்ணப்பதாரரின் நிலம், பயிர் முறை, வருமானம் போன்றவற்றையும் வங்கி பரிசோதிக்கும். அதன் பிறகே வங்கி கிசான் கிரெடிட் கார்டு வழங்கும்.

● அனைத்து விவசாயிகளும் கிசான் கிரெடிட் கார்டு பெற்றிருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசாங்கம் செயல் படுவதால் இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளவும். மேலும் விவரங்களுக்கு நங்கவள்ளி வேளாண்மை விரிவாக்க மையத்தை அனுகவும்.

# டிஏபி உரத்திற்கு மாற்றாக சூப்பர் பாஸ்பேட் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்களை பயன்படுத்தலாம் என அறிவுரை

விருதுநகர், ஜூலை 12

விருதுநகர் மாவட்டத்தில் நடப்பாண்டில் இதுவரை நெல் 1484 ஹெக்டேர் பரப்பளவில் பயிடப்பட்டுள்ளது. அதுபோல் சிறுதானியங்கள் 320 ஹெக்டேர் பரப்பளவிலும் பயறு வகை பயிர்கள் 236 ஹெக்டேர் பரப்பளவிலும் எண்ணெய் வித்து பயிர்கள் 582 ஹெக்டேர் பரப்பளவிலும், பருத்தி 313 ஹெக்டேர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த சாகுபடிக்கு தேவையான உரங்கள் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.




விருதுநகர் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் தனியார் உரம் விற்பனை நிலையங்களில் யூரியா 3962 டன், டி.ஏ.பி 993 டன், பொட்டாஷ் 403 டன், காம்ப்ளக்ஸ் உரங்கள் 1909 டன் விவசாயிகளின் தேவைக்காக இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும் விவசாயிகள், பயிர் சாகுபடிக்கு டி.ஏ.பி. உரத்துக்கு மாற்றாக சூப்பர் பாஸ்பேட் உரம் மற்றும் காம்பளக்ஸ் உரங்களை பயன்படுத்தலாம். சூப்பர் பாஸ்பேட் உரத்தில் பயிர்களுக்கு தேவையான பாஸ்பரஸ், சல்பர் மற்றும் கால்சியம் போன்ற கூடுதல் சத்துக்கள் அடங்கியுள்ளன. இந்த உரம் பெரும்பாலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. சூப்பர் பாஸ்பேட் உரத்தினை எண்ணெய்வித்து பயிர்களில் டி.ஏ.பி. உரத்துக்கு மாற்றாக பயன்படுத்தும் பொழுது மகசூல் அதிகரிப்பதுடன் எண்ணெய் அளவும் அதிகரிக்கின்றது. எள், சூரியகாந்தி போன்ற எண்ணெய்வித்து பயிர்களுக்கு சல்பர் சத்து அத்தியா வசியமானதாகும். மண்ணில் டி.ஏ.பி. உரமிடும் போது மண்ணில் ஏற்படுத்தும் உப்பு நிலையை விட சூப்பர் பாஸ்பேட் உரத்தினை பயன்படுத்தும் போது குறைவாகவே உப்பு நிலை ஏற்படுத்துவதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் டி.ஏ.பி. உரத்திற்கு பதிலாக சூப்பர் பாஸ்பேட் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்களை பயன்படுத்தி பயன் பெறலாம். இதற்காக விருதுநகர் மாவட்டத்தில் 191 டன் சூப்பர் பாஸ்பேட் உரம் மற்றும் 1909 டன் காம்ப்ளகஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், உரம் கிடைப்பதில் பிரச்சனை, இரசீது இல்லாமல் விற்பனை செய்வது, அதிக விலைக்கு விற்பனை செய்வது, பிற உரங்களை வாங்க கட்டாயப் படுத்துவது மற்றும் உரம் பதுக்கல் பற்றிய புகார்களை அந்தந்த பகுதிகளுக்கான வட்டார வேளாண்மை உதவி இயக்குநரிடம் விவசாயிகள் தெரிவிக்கலாம் என விருதுநகர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் க.விஜயா தெரிவிக்கிறார்.



# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மாநில அளவிலான மாபெரும் வேளாண் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி

திருச்சி, ஜூலை 12

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், புதிய தொழில்நுட்பங்கள், செயல்முறை விளக்கப் பயிற்சிகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்றவை வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்ககம், பயிர் மேலாண்மை இயக்ககம், பயிர் வினையியல் துறை மற்றும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் இணைந்து நடத்தும் விவசாயிகளுக்கான மாநில அளவிலான மாபெரும் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் ஏற்படும் பயிர் வினையியல் குறைபாடுகள் மற்றும் அதன் நிவர்த்தி முறைகள் என்ற தலைப்பில் 30.7.24 (செவ்வாய்க்கிழமை) அன்று காலை 10 மணி முதல் நடைபெற உள்ளது. பொதுவாக பயிர் சாகுபடியில் மகசூல் இழப்புக்கு பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மற்றும் பயிர் வினையியல் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளை காரணம் ஆகும். இதனை கருத்தில் கொண்டு இந்த கருத்தரங்கில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் ஏற்படும் பயிர் வினையியல் குறைபாடுகள், ஊட்டச்சத்து பற்றாக்குறைகளால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதனை நிவர்த்தி செய்யும் முறைகள் குறித்து பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அரசு அலுவலர்கள் மற்றும் அனுபவ விவசாயிகள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள உள்ளனர்.

எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஆர்வமுள்ள விவசாயிகள் https://docs.google.com/forms/d/1e_NLR1pkfov-GRhKa1eeN9YQoRQXMZzOOy1n1bYCwAHY என்ற லிங்கில் முன்பதிவு செய்யவும். 91717 17832 என்ற எண்ணில் வாட்ஸ் அப் மூலம் முன்பதிவு செய்யலாம். மேலும் விவரங்களுக்கு 91717 17832, 0431-2962854 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜா பாபு தெரிவித்தார்.

# நொச்சி தாவரத்தின் சிறப்புகள்

நொச்சி மூன்று அல்லது ஐந்து கூட்டிலைகளை எதிரடுக்கில் பெற்ற சிறுபுதர். இலைகள் வெகுட்டல் மணமுடையது. தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் வளர்கிறது. இலைகள், பட்டை ஆகியவை கருப்பு நிறமாய் அமைந்த கருநொச்சி என்ற இனமும் உண்டு. எங்கும் இயல்பாய்க் கிடைக்கக்கூடிய வெண்நொச்சியின் பயனே இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இலை வலி போக்குதல், சிறுநீர் பெருக்குதல், நோய் நீக்கி உடல் நலம் பேணுதல், மாதவிலக்கு தூண்டுதல் மற்றும் குடற்புழு நீக்குதல் ஆகிய குணங்களை உடையது. பட்டை சுரம் போக்கி உடலை வலுவாக்கவும், சளியகற்றி சிறுநீர்ப் பெருக்கவும் பயன்படும்.

1. நொச்சி, நுனா, வேம்பு பொடுத்தலை வகைக்கு ஒரு பிடி ஒரு லிட்டர் நீரில் போட்டு 4 மிளகு, 1 டீஸ்பூன் சீரகமும் சேர்த்து கால் லிட்டராக காய்ச்சி 30 மில்லி வீதம் 3 வேளை 3 நாள்கள் கொடுக்க மாந்தம் தீரும்.

2. ஒரு பிடி நொச்சி இலை, மூக்கிரட்டை வேர், காக்கரட்டான் வேர் வகைக்கு அரை பிடி சிதைத்து சுக்கு ஒரு துண்டு, 5 மிளகு, 1 டீஸ்பூன் சீரகம் ஆகியவற்றுடன் ஒரு லிட்டர் நீரில் போட்டு அரை லிட்டராக காய்ச்சி 30 மில்லி வீதம் காலை மாலை ஒரு வாரம் கொடுத்து வர தொடக்க நிலையில் உள்ள இளம்பிள்ளை வாதம் (போலியோ) தீரும்.

3. 2 இலை, 4 மிளகு. 1 இலவங்கம். பூண்டுப்பல் 4 (சிறியது) வாயில் போட்டு மென்று சுவைத்து சாரத்தை மெதுவாக விழுங்கினால் ஆஸ்துமா மூச்சுத்திணறல் தீரும். நீடித்து உண்டுவர ஆஸ்துமா தீரும்.

4. ஒரு தேக்கரண்டி இலைச்சாற்றில் ஒரு கிராம் மிளகுத்தூளும் சிறிது நெய்யும் சேர்த்து காலை மாலை இச்சா பத்தியத்துடன் (தீவிர ஆசையை தவிர்த்தல்) பாகற்காய், அகத்தி, மீன். கருவாடு நீங்கலாக உணவு கொண்டு இவ்விலையையும் உத்தாமணி இலையையும் வதக்கி ஒத்தடம் கொடுக்க மூட்டு வலி, இடுப்பு வலி, வீக்கம் ஆகியவை தீரும்.

5. நொச்சி, வேம்பு, தழுதாழை, தும்பை, குப்பைமேனி, ஆடாதொடை மற்றும் நாயுருவி வகைக்கு 1 பிடி முக்கால் அளவு நீர் உள்ள வாயகன்ற மண் கலத்தில் கொதிக்க வைத்து சூடு செய்த செங்கல்லை போட்டு வேது பிடிக்க வாதம் அனைத்தும் தீரும். வாரத்திற்கு ஓர் இரண்டு முறை செய்யலாம்.

6. இலையை தலையணையாக பயன்படுத்த மண்டை சூடு, கழுத்து வீக்கம். கழுத்து நரம்பு வலி, சன்னி இழுப்பு, கழுத்து வாதம், மூக்கடைப்பு (பீனிசம்) சரியாகும்.

7. இலைச்சாறு 5 மில்லி பசுங்கோமியம் 5 மில்லி சாப்பிட கல்லீரல் மண்ணீரல் நுரையீரல் வீக்கம் குறையும்.

8. அங்கக வேளாண் பூச்சி மேலாண்மையில் இதன் இலைகள் பூச்சி விரட்டி கரைசலாக தயாரித்து பயன்படுத்தப்படுகிறது.

இத்தகைய அளப்பறிய நன்மைகளைக் கொண்டிருக்கும் நொச்சியினை விவசாயிகள் சாகுபடி செய்து பயன்பெறலாம் என சேலம் மாவட்டம், பனைமரத்துப்பட்டி வேளாண்மை உதவி இயக்குநர் வேலு தெரிவித்தார்.

# தென்னையில் மதிப்பு கூட்டுதல்

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம், அரியம்பாளையம் கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் இரா.கிரிஜா தலைமையில் அட்மா திட்டத்தின் கீழ் தென்னையில் மதிப்பு கூட்டுதல் குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது.

தென்னையிலிருந்து கிடைக்கும் தென்னை மட்டைகள், கீழே விழும் குரும்பைகளை மதிப்பு கூட்டி வருவாய் பெறலாம் என்றும், மட்டையிலிருந்து பல்வேறு பொருட்கள் மதிப்பு கூட்டி தயாரிக்கப்பட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பயன்பெறலாம் என்றும், தேங்காய் தொட்டியிலிருந்து சிரட்டை கரி எனப்படும் 'கார்பன்' தயாரிப்பும், விவசாயிகள் தங்கள் தோப்பிலுள்ள, மொத்த மரங்கள், அவற்றின் காய்ப்புத்திறன், கிடைக்கும் காய்கள் ஆகியவற்றை கணக்கிட்டு பதிவேடு பராமரிக்க வேண்டும். கொப்பரை உற்பத்தியின் போது கிடைக்கும், தேங்காய் தொட்டியை வெளிச்சந்தைகளில் விற்பனை செய்யலாம். மட்டைகளிலிருந்து துடைப்பம் தயாரிக்கலாம். கழிவுகளை உரமாக்கி, உரச் செலவை குறைக்கலாம். கயிறு திரித்தல், தேங்காய் எண்ணெயில், தின்பண்டம் தயாரித்தல், தேங்காய் தொட்டியில் அலங்கார பொருட்கள் செய்தல் என பல்வேறு சிறு தொழில் வாய்ப்புகள் பற்றி விரிவாக எடுத்து கூறப்பட்டது. துணை வேளாண்மை அலுவலர் பி.கிருஷ்ணமூர்த்தி பயிர் காப்பீடு திட்டம் பற்றியும் கிசான் கடன் அட்டை பற்றியும் எடுத்து கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்க, தோட்டக்கலை உதவி இயக்குநர் இரா.அனுசா, வேளாண் பொறியியல் துறை இளநிலை உதவியாளர் எல்.சரவணன், ஆகியோர் தங்கள் துறை சார்ந்த மானிய திட்டங்கள் குறித்தும் எடுத்து கூறினர். உதவி வேளாண்மை அலுவலர் எம்.மதிவாணன், உதவி தோட்டக்கலை அலுவலர் பி.தேசிங்குராஜா கலந்து கொண்டனர். பயிற்சி ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி, தீபன் முத்துசாமி செய்து இருந்தனர். பயிற்சியில் கலந்து கொண்ட 40க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.